**உத்தேச மசேநி மாற்றங்கள் – நீங்கள் பதில் பெற விரும்பிய கேள்விள்**

**கே1. மசேநி முறையில் நாம் மாற்றங்கள் செய்வதற்கான தேவை என்ன?**

இன்று, வேலை ஓய்வுபெறுபவர்களில் பலர், தங்களின் முதுமைக் காலத்தில் தங்களை ஆதரிக்க தங்களின் பிள்ளைகளை நம்பியுள்ளனர். ஆனால் இப்போது அதிகமான பேர் நீண்ட காலம் வாழ்கின்றனர். அவர்கள் ஒற்றையர்களாக இருக்கின்றனர் அல்லது குறைவான பிள்ளைகளைக் கொண்டுள்ளனர். எதிர்காலத்தில் வேலை ஓய்வுபெறுபவர்கள் தங்களின் ஓய்வுக்காலத் தேவைகளுக்கு அதிகமாகத் தங்களின் மசேநி சேமிப்புகளை நம்பியிருக்கவேண்டும். எதிர்காலத்தில் வரக்கூடிய இந்தச் சவால்களைச் சமாளிக்கத் தயாராகும் பொருட்டு மசேநி முறையை மேம்படுத்தத் தொடங்க வேண்டும். இந்த மாற்றங்களுக்குத் தங்களைச் சரிப்படுத்திக்கொள்ள சிங்கப்பூரர்களுக்குப் போதிய காலம் தரப்படும்.

**கே2. குறைந்தபட்சத் தொகையை உயர்த்தி சிறப்புக் கணக்கில் சேர்க்கும் சந்தாத்தொகை விகிதங்களை அதிகரிப்பதன் தேவை என்ன?**

பொருளியல் வளர்ச்சியடையும் வேளையில் சம்பளங்கள் உயரும்போது, தங்களின் வேலை ஓய்வுக்கான அடிப்படைத் தேவைகளுக்குப் போதுமான தொகை என்ன என்பது குறித்து சிங்கப்பூரர்களுக்கு அதிகமான எதிர்பார்ப்பு இருக்கும். தற்போது உள்ள குறைந்த பட்சத் தொகையான $80,000 போதுமானதாக இருக்காது. அதே வேளையில், அதிக சிங்கப்பூரர்கள் குறைந்தபட்சத் தொகையை அடைய உதவும்பொருட்டு சிறப்புக் கணக்குத் தொகையும் அதிகரிக்கப்படவேண்டும். சௌகரியமான வகையில் வேலை ஓய்வுபெற சிங்கப்பூரர்கள் போதிய தொகையை ஒதுக்கிவைப்பதை இந்த நடவடிக்கைகள் உறுதி செய்யும்.

**கே3. என் அடைமானக் கடனைத் திருப்பிச் செலுத்த என் சிறப்புக் கணக்கில் போதிய அளவு பணம் இருக்குமா?**

ஆம், முதலாளிகளின் மசேநி சந்தாத்தொகை முழுமையாகத் திருப்பிக்கொடுக்கப்படும்பொழுது பெரும்பாலான மசேநி உறுப்பினர்கள் இப்போது பெறுவதை விட அதிகமாக சாதாரணக் கணக்குச் சந்தாத் தொகையைப் பெறுவார்கள். தொடர்ந்து தங்களின் அடைமானக் கடனைச் செலுத்த அவர்களுக்குக் கட்டுபடியாகும்.

[மசேநி சந்தா விகித மாற்றங்கள் பற்றி மேலும் தகவல் பெற www.erc.gov.sg. எனும் இஆர்சி இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்.]

**கே4. 50 -55க்கும் இடைப்பட்ட முதிய ஊழியர்களின் மொத்த மசேநி சந்தா விகிதத்தை 32%-ஆகக் குறைப்பதற்கான தேவை என்ன(முதலாளிகளால் 16%-ம் ஊழியர்களால் 16%-ம்) ?**

நமது பணிமூப்பு அடிப்படையிலான சம்பள முறையின் கீழ், ஒரே மாதிரியான திறன்களைக் கொண்ட இளம் ஊழியர்களைவிட முதிர்ச்சியடைந்த ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவது முதலாளிகளுக்கு அதிகச் செலவாகிறது. நிறுவனங்கள் ஆட்குறைப்புச் செய்யும்போது இவர்கள்தான் பெரும் பாதிப்புக்குள்ளாவார்கள். இவர்கள் ஆட்குறைப்புக்கு ஆளாகினால், மீண்டும் வேலையைப் பெறுவதில் அதிகச் சிரமப்படுவார்கள். 50-55 வயது ஊழியர்களுக்கான 40% மசேநி சந்தா விகிதம் இந்தப் பிரச்னையை மேலும் சிக்கலாக்குகிறது. இதற்குக்காரணம், முதிய ஊழியர்களை முதலாளிகள் வேலைக்கு அமர்த்துவதையும் குறைந்த அளவில் வீட்டுக்குக் கொண்டு செல்லும் சம்பளமுள்ள வேலையில் மூத்த ஊழியர்கள் சேருவதையும் இது ஊக்குவிப்பதில்லை. இத்தகைய பிரிவினருக்கான மொத்த மசேநி சந்தா விகிதத்தை 32%-ஆகக் குறைப்பது அவர்கள் தங்களின் வேலைகளைத் தக்கவைத்துக்கொள்ள உதவும், ஆட்குறைப்புக்கு ஆளாகும்போது புதிய வேலைகளைப் பெறும் அவர்களின் வாய்ப்பை மேம்படுத்தும்.

### கே5. 50 - 55 வயது ஊழியர்களின் ஒட்டுமொத்த சந்தா விகிதம், அவர்களின் வீட்டு அடைமானத் தொகையைச் செலுத்துவதில் பற்றாக்குறையை ஏற்படுத்தாதா?

ஊழியர்களின் மசேநி சந்தாத் தொகை 16%ஆகக் குறைக்கப்படுவதால் 50-55 வயது ஊழியர்களுக்கு வீட்டுக்குக் கொண்டு செல்லும் சம்பளம் கூடுதலாகக் கிடைக்கும். மற்றவர்களுக்கு மசேநி சந்தா முழுமையாகத் திருப்பிக்கொடுக்கும் வேளையில், இந்த வயதுப் பிரிவில் உள்ள தகுதியுள்ள ஊழியர்களுக்கு போனசுகள் அல்லது மாறுபடும் மாதாந்திர சம்பள விகிதத்தை வெகுமதியாகக் கொடுக்கும்படி முதலாளிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். தங்களின் அடைமானத் தொகைகளைச் செலுத்த அதிகரித்த தங்களின் ரொக்க சம்பளங்களை ஊழியர்கள் பயன்படுத்தலாம். பாதிக்கப்பட்ட ஊழியர்கள் இந்த மாற்றங்களுக்குத் தங்களைச் சரிசெய்துகொள்ள உதவும் பொருட்டு, அவர்கள் 55 வயதை அடையும் வரை, அடைமானத் தொகைகளைச் செலுத்துவதில் பற்றாக்குறை ஏற்பட்டால் அவர்கள் தங்களின் சிறப்புக் கணக்கிலிருந்து பணம் எடுத்துக்கொள்ள அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று இஆர்சி யோசனை தெரிவித்துள்ளது.

### கே6. மசேநி சந்தா செலுத்துவதற்கான உச்ச சம்பளத் தொகையான $6,000 லிருந்து $5,000 ஆக ஏன் இஆர்சி குறைக்க விரும்புகிறது?

அதிக சம்பளத்தை ஈட்டுவோரிடம் கூடுதல் ரொக்க சேமிப்புகள் இருக்கும் என்பதால் அவர்கள் தங்களின் சொந்த நிதி விவகாரங்களைக் கவனித்துக்கொள்ள முடியும். சம்பள உச்ச வரம்பை $5,000க்குக் குறைத்தால் அவர்களின் கட்டாய சேமிப்புகள் குறையும், தங்களின் வேலை ஓய்வுத் தேவைகளுக்குத் திட்டமிடுதல் உட்பட தங்களுக்குத் தாங்களே அதிக பொறுப்புக்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள அது அனுமதிக்கும்.

### கே7. ஊழியர்களின் மசேநி சந்தாத் தொகையைச் செலுத்துவதற்கான குறைந்த பட்ச சம்பளத் தொகையான $500ஐ $750 ஆக உயர்த்துவதால் குறைந்த வருமானம் ஈட்டும் ஊழியர்கள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள்?

$500க்கும் $750 க்கும் இடைப்பட்ட ஊதியம் ஈட்டும் ஊழியர்கள் தங்களின் மசேநி சேமிப்புகளில் தங்களின் சம்பளத்திலிருந்து குறைந்த தொகையையே செலுத்துவர். இதன் மூலம் தங்களின் அன்றாட வாழ்க்கைச் செலவினங்களுக்காக அவர்கள் அதிகமாக வீட்டுக்குக் கொண்டு செல்லும் தொகையைப் பெறுவர்.

**கே8. தனியார் வேலை ஓய்வு நிதிகளில் முதலீடு செய்வதற்கு வசதி செய்துகொடுக்கும் மசேநி கழகத்தின் யோசனையிலிருந்து நான் எப்படி நன்மை பெறுவேன்?**

பட்டத்தொழிலர்களின் நிர்வாகம், குறைந்த செலவு, சிறந்த வகையில் பரவலாக்குதல் போன்ற சாதகங்களை வழங்கும் முதலீட்டுத் திட்டங்களே தனியார் ஓய்வூதியத் திட்டங்களாகும். இத்தகைய திட்டத்தில் உங்களின் மசேநி சேமிப்புகளை முதலீடு செய்ய விரும்பினால், நீங்கள் சொந்தமாகப் பங்குகளை வாங்கியிருந்தால், அவற்றை விட நீண்டகால அடிப்படையில் சிறந்த லாபங்களை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

**கே9. மசேநியை வீடமைப்புக்குப் பயன்படுத்துவதற்கான உத்தேச வரையறை, சொத்து வாங்கும் என் திறனை அல்லது அடைமானத் தொகையைச் செலுத்தும் என் ஆற்றலை எப்படிப் பாதிக்கும்?**

வீட்டுடைமை கட்டுபடியாக இருப்பது பாதிக்கப்பட மாட்டாது. மானியத் தொகையில் வீவக வழங்கும் கடன் அடிப்படையில் வீவக வீட்டை நீங்கள் வாங்குவதாக இருந்தால், இந்த வரையறை உங்களுக்குப் பொருந்தாது. நீங்கள் ஏற்கனவே வீடு வாங்கியிருந்தால், உங்களுக்கும் இந்த வரையறை பொருந்தாது. இந்த வரையறை புதிதாக வீடு வாங்குபவர்களுக்குத்தான் பொருந்தும். ஆனால் அவர்களுக்கும் கூட அது தாராளமாக இகுக்கும். தங்களின் அடைமானத் தொகையைச் செலுத்த ரொக்கத்தைப் பயன்படுத்தத் தொடங்கும் முன், மசேநி மட்டும் பயன்படுத்தி தங்களின் அடைமானத் தொகையைக் கிட்டதட்ட 20 ஆண்டுகள் வரை வீடு வாங்குபவர்கள் செலுத்தலாம்.